**கவனிக்க.-** *2008.05.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1551 - 2008 මැයි 23 වැනි සිකුරාදා - 2008.05.23

*1551 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 514 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 522 |


**கவனிக்க.-** (i) *தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் 2008, மாச்சு 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *ஸ்ரீ பாத கல்பவரூக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2008, மாச்சு 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற்கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மே 30 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மே 16 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

### துணை மருத்துவ சேவையுள் பாடசாலைப் பற்சிகிச்சையாளர் பயிற்சியின் பொருட்டு பெண் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் துணை மருத்துவ சேவையில் பாடசாலைப் பற்சிகிச்சையாளர் (பெண்) பயிற்சிப் பாடநெறிக்குப் பெண் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்காக தகைமையுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. 2003 தொடக்கம் 2006 வரையான ஆண்டுகளின் கல்வி பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் விஞ்ஞான நெறியில் பெற்ற 'Z' புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

2. முன்னர் 2007.12.28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி பூரணமான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரிகளும் இப்பயிற்சிக்காக விண்ணப்பிக்க முடியும்

2.1 முதல் பயிற்சி குழுவில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் மாவட்ட ரீதியாக கீழ்க்காணும் பட்டியலின் அடிப்படையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும். குறிப்பிட்ட மாவட்டங் களில் உள்ள வெற்றிடங்கள் பின்வருமாறு :-

| மாவட்டம் | வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| கம்பஹா | 20 |
| களுத்துறை | 13 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 03 |
| நுவரெலியா | 03 |
| காலி/மாத்தறை/ அம்பாந்தோட்டை | 15 |
| புத்தளம் | 03 |
| அநுராதபுரம் | 10 |
| பொலன்னறுவை | 04 |
| யாழ்ப்பாணம் | 01 |
| முல்லைத்தீவு | 02 |
| மன்னார் | 01 |
| கிளிநொச்சி | 02 |
| கல்முனை | 05 |
| அம்பாறை | 01 |
| மட்டக்களப்பு | 02 |
| திருகோணமலை | 04 |
| பதுளை | 09 |
| மொனராகலை | 08 |
| இரத்தினபுரி | 04 |
| கேகாலை | 03 |

2.2 2007.12.28 ஆந் திகதிய வர்த்தமான பத்திரிகை அறிவித்த லின் படி தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளும் இவ்வெற்றிடங்களுக்காகத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

3. இது ஒரு முழு நேர பாடநெறியாகும். வார நாட்களில் 5 நாட்களும் வார இறுதி நாட்களில் சனிக்கிழமைகளில் மதியம் வரையும் நடைபெறவுள்ளதால் வேறு பாடநெறிகளை பயில்வோர் இப்பாட நெறிக்காக விண்ணப்பித்தல் கூடாது.

4. பாடநெறிகளுக்கான பயிற்சிக் காலம் இரண்டு வருடங்கள்.

**5. கல்வித் தகைமைகள் :**

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் தமிழ்/சிங்கள மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.2 க. பொ. த. (உ.த.) பரீட்சை 2003 தொடக்கம் 2006 வரையான ஆண்டுகளில் விஞ்ஞான நெறியில் ஒரே அமர்வில் உயிரியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல். Z புள்ளி மதிப்பு விண்ணப்பத்தில் உள்ளடக்கியிருப்பது கட்டாயமாகும்.

**6. ஏனைய தகைமைகள் :**

(அ) 4 அடி 10 அங்குலத்திற்கு மேற்பட்ட பெண்களாக இருத்தல்.

(ஆ) திருமணம் செய்யாதவர்களாகவும் இப்பயிற்சிக் காலம் முடியும் வரை திருமணம் செய்யாமலும் இருக்க வேண்டும்.

(இ) 16.06.2008 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) நாட்டில் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றச் சம்மதிப்பவராக இருத்தல் வேண்டும்.

(உ) தேக ஆரோக்கியம் உடையவராகவும் சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்களாவது வசித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

**7. விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத் துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதில் ரூபா 500 பெறுமதியுடைய முத்திரை ஒட்டி அதன்மேல் தனது கையொப்பமிட்டு முத்திரையை இரத்து செய்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/ கல்விச்சேவை/ அரச கணக்காய்வாளர் சேவை/ அரச பாடசாலை அதிபர்கள்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 1,24,080 க்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகிய யாராவது ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(இ) முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் ''பணிப்பாளர் (நிர்வாகம்) 2, சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10'' என்ற முகவரிக்கு 2008.06.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்புவதுடன் கடித உறையின் இடது மேல் மூலையில் ''பல் மருத்துவத்துறைக்கான மேலதிக

சேவைகளை வழங்கும் பாடநெறிக்காக மாணவர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

9. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. மேற்குறிப்பிட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளுடன் பூரணமான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் நேர்முகப் பரீட்சை ரத்துச் செய்யப்படும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) கல்விச் சான்றிதழ் மூலப்பிரதிகள்; மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து, வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கு கொடுக்கப்பட்ட பெறுபேறு படிவங்கள் அல்லது பரீட்சை அமர்வுப் பாடசாலை அதிபர்களினால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி.

(இ) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சை புள்ளிகள் குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ்

(ஈ) தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம்.

(உ) மாவட்டத்தினுள் 3 வருடங்கள் வதிந்திருப்பதை உறுதி செய்ய 2003 இலிருந்து 2006 ஆம் ஆண்டுகளின் உறுதிப்படுத்தப் பட்ட வாக்காளர் பட்டியல்களின் பிரதிகள். விண்ணப்ப தாரியின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாதவிடத்தில் அவரது பெற்றோரின் பெயர்கள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இத்தகையோர் வாக்காளர் பட்டியலுக்கு மேலதிகமாக கிராம சேவையாளரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. பயிற்சித் திட்டம்.- (i) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நெறிகளுக்காக மஹரகமை பயிற்சி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள். பாடநெறிகள் ஆங்கில மொழி மூலமே போதிக்கப்படும்.

(ii) பயிற்சி பாடசாலைகளின் சட்ட திட்டங்களையும் ஒழுங்கு களையும் கடைப்பிடிக்க வேண்டியதுடன் சுகாதார திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் அமுல்படுத்தப் படும் சட்டதிட்ட திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது அவசியமாகும்.

(iii) இப்பயிலுனர்களுக்கான பயிற்சிகளின் போது நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையாது அல்லது நடத்தை மற்றும் செயற்பாடுகள் திருப்தியற்ற அல்லது பரீட்சை விதிமுறைகளை பின்பற்றாது மற்றும் பயிற்சி காலப் பகுதியில் உரிய வகையில் சமூகமளிக்காது இருப்பின் எவ்வித முன்னறிவித்தலோ அல்லது நட்டஈடு இன்றியோ எந்நேரத்திலும் இடைநிறுத்தப்படலாம்.

(iv) பயிற்சியின் போது கொடுப்பனவாக ரூபா 6000 வழங்கப் படும்.

(v) பயிலுநர்கள் பயிற்சி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் போது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். அதாவது பயிலுநர் பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதுடன் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் 10 வருடங்கள் சேவையாற்ற முடியும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது தொடர முடியாவிடின் மேற்குறிப்பிட்ட (iii) இல் உள்ளவாறு பயிலுநர் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் மீள்செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

13. **சேவைக்கு அமர்த்தல் விதிகள்.**- பயிற்சிநெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறும் பயிலுநர்களுக்கு குறித்த துறைகளுக்கான தரம் III ற்கான நியமனங்கள் அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் எப்பகுதியா யினும் வெற்றிடங்களைப் பொறுத்து இந்நியமனங்கள் வழங்கப்படும். முதலாவது நியமனம் கிடைக்கப்பெறும் இடத்தில் அவர்கள் 2 வருடங்கள் கட்டாயம் சேவையாற்ற வேண்டும்.

14. விண்ணப்பங்களை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாக நிரப்பவும். பயிற்சிகளின் போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து இடைநிறுத்தவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையில் எப்பகுதி யாயினும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் தகுதியை நிரூபிப்பதற்கான மருத்தவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

16. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை மாற்றங்களுக்கேற்பவும், நிதி மற்றும் ஏனைய அரச சட்டதிட்ட மாற்றங்களுக்கும் கீழ்ப்படிவாக செயற்பட வேண்டும்.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2008.05.02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

துணை மருத்துவ சேவையினுள் பாடசாலைப் பற்சிகிச்சையாளர் பயிற்சியின் பொருட்டு பெண் மாணவர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

(ii) மாவட்டம் :-

(iii) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா? (ஆம்/இல்லை) :-

(iv) ஆம் எனில் எவ்வளவு காலம் :-

4. பிறந்த திகதி :-

ஆண்டு............................ மாதம்...................... திகதி....................

2008.06.16 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் ............... மாதங்கள் ............. நாட்கள் .............

5. ஆணா அல்லது பெண்ணா (உரிய கூட்டில் "✓" குறிப்பிடவும்)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

6. உயரம் -

அடி................. அங்குலம்.................

7. நீங்கள் இலங்கைப் பிரசையா? (பொருத்தமான கூட்டில் " ✓ " குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? : ................................

10. கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (உயர் தரம்) பரீட்சை (விஞ்ஞான பிரிவு மட்டும்)
(தயவு செய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்)

பரீட்சையின் திகதி :..............................

பரீட்சைக்கு தோற்றிய மாவட்டம் :............................

ஆண்டு :............................. சுட்டெண் :..........................

Z புள்ளி :....................

| பாடம் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சை :
முதலாம் அமர்வு :
ஆண்டு :..................... சுட்டெண் :....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 7 | |
| 2 | | 8 | |
| 3 | | 9 | |
| 4 | | 10 | |
| 5 | | 11 | |
| 6 | | 12 | |

இரண்டாம் அமர்வு :
ஆண்டு :..................... சுட்டெண் :....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 7 | |
| 2 | | 8 | |
| 3 | | 9 | |
| 4 | | 10 | |
| 5 | | 11 | |
| 6 | | 12 | |

11. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா?

(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவு செய்து காரணத்தைக் குறிப்பிடுக.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தேர்வுக்கு முன்னராயின் தகுதியற்றவனாவதற்கும்,

நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

..................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

முத்திரைக்கூடு

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................ ...............................................................எனக்கு தனிப்பட்ட முறையில் பரிட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில்........................2008 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்).

உறுதிப்படுத்துபவரின் விபரம் :

முழுப் பெயர் :........................................................................

தொழில் :................................................................................

முகவரி :.................................................................................

திகதி :..................................

5-358

---

## சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

### துணை மருத்துவத் துறைகளுக்கான (PSM) தொழிற்பயிற்சிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல் - 2008

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சின் துணை மருத்துவத் துறைகளுக்கான தொழிற்பயிற்சிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரிகள் அவர்களது தகைமைகளுக்கேற்ப பாட நெறியை தமது விருப்பின்படி தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டுகளின் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் பெற்ற "Z" புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

2. பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளும் மாணவர் தொகையைப் பொறுத்து மாவட்ட, சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

3. இது ஒரு முழு நேர பாட நெறியாகும். வார நாட்களில் 5 நாட்களும் வார இறுதி நாட்களில் சனிக்கிழமைகளில் மதியம் வரையும் நடைபெறவுள்ளதால் வேறு பாட நெறிகளை பயில்வோர் இப்பாட நெறிக்காக விண்ணப்பித்தல் கூடாது.

4. குறித்த பாட நெறிகளுக்கான பயிற்சிக் கால வரையறைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :-

| குறியீட்டு இல. | பாடநெறி | பயிற்சிக் கால வரையறை |
|---|---|---|
| 1. | மருந்தாளர்கள் (Pharmacist) | 02 வருடங்கள் |
| 2. | மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் (Medical Laboratory Technologist) | 02 வருடங்கள் |
| 3. | இயன் சிகிச்சையாளர்கள் (Physiotherapists) | 02 வருடங்கள் |
| 4. | சிகிச்சைக் கதிர்ப்படப் பதிவாளர்கள் (Therapy Radiographer) | 02 வருடங்கள் |
| 5. | பிணியாய் கதிர்ப்படப் பதிவாளர்கள் (Diagnostic Radiographer) | 02 வருடங்கள் |

5. **கல்வித் தகைமைகள்.**- விண்ணப்பதாரிகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் க.பொ. த. (உ. த.) விஞ்ஞான பிரிவில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவு செய்யும் பாட நெறிக்கான விஞ்ஞான பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பயிற்சி நெறிகளுக்குத் தேவையான தகைமைகள் பின்வருமாறு :-

| குறியீட்டு இல. | பாடநெறி | க.பொ. த. (உ.த.) தகைமைகள் | க.பொ.த.(சா.த.) தகைமைகள் |
|---|---|---|---|
| 1.<br><br>2. | மருந்தாளர்கள் (Pharmacist)<br><br>மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் Medical Laboratory Technologist) | க. பொ.த. (உ.த.) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியும் பின்வரும் பாடங்கள் ஏதாவது இரண்டில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்- இணைந்த கணிதம், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |
| 3.<br><br>4. | இயன் சிகிச்சையாளர்கள் (Physio- therapists)<br>சிகிச்சைக் கதிர்ப்படப் பதிவாளர்கள் (Therapy Radiographer) | க. பொ.த. (உ.த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் பின்வரும் ஏதாவது இரு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்- | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் |

| குறியீட்டு இல. | பாடநெறி | க.பொ. த. (உ.த.) தகைமைகள் | க.பொ.த.(சா.த.) தகைமைகள் |
|---|---|---|---|
| 5. | பிணியாய் கதிர்ப் படப் பதிவா ளர்கள் (Diagnostic Radiographer) | இணைந்த கணிதம், இரசாயனவியல் உயிரியல், விவசாய விஞ்ஞானம் | ஒரு பாடத்தில் திறமைச் சித்தி களுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங் களில் சித்தி |

6. **ஏனைய தகைமைகள்**.- (அ) 2008.06.30 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டில் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றச் சம்மதிப்பவராக இருத்தல் வேண்டும்.

(இ) உடற் தகுதியுடன் சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்களாவது வசித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதில் ரூபா 500 பெறுமதியுடைய முத்திரை ஒட்டி அதன்மேல் தனது கையொப்பமிட்டு முத்திரையை இரத்து செய்தல் வேண்டும்.

(ஆ) ஒரே விண்ணப்பதார் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதானால் ஒவ்வொரு பதவிகளுக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களை அனுப்புல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/ கல்விச்சேவை/ அரச கணக்காய்வாளர்சேவை/ அரச பாடசாலை அதிபர்கள்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 1,24,080க்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகிய யாராவது ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, 'சுவசிறிபாய' இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு- 10" என்ற முகவரிக்கு 2008.06.30 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பித்திருக்கும் பதவியின் பெயரை எழுதியிருக்க வேண்டும்.

8. அரசாங்க அல்லது அரச சார்பான நிறுவனங்களில் சேவை யாற்றும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்ப வேண்டும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

10. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. மேற்குறிப்பிட்ட தகைமைகள் மற்றும் தகைமைகளுடன் விண்ணப்பித்தவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்படும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் மூலப்பிரதிகள், மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து வெளிவாரி பரீட்சார்த்தியென்றால் பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பெறுபேறு படிவங்கள் அல்லது பாடசாலை பரீட்சை அமர்வு என்றால் குறித்த பாடசாலை அதிபர்களினால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி ;

(இ) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சை புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் ;

(ஈ) தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப் பத்திரம் ;

(உ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் 3 வருடங் கள் வதிவதை உறுதிப்படுத்த 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டுகளின் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களின் பிரதிகள். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாதவிடத்தில் அவரது பெற்றோரின் பெயர்கள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இத்தகையோர் வாக்காளர் பட்டியலுக்கு மேலதிகமாக கிராம சேவையாளரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. **பயிற்சித் திட்டம்**.- (i) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நெறி களுக்காக பயிற்சி பாடசாலைகளுக்கு மேற்படி 04 ஆம் பந்தியில் உள்ளவாறு அனுமதிக்கப்படுவார்கள். பாடநெறிகள் ஆங்கில மொழி மூலமே போதிக்கப்படும்.

(ii) பயிற்சி பாடசாலைகளின் சட்ட திட்டங்களையும் ஒழுங்கு களையும் கடைப்பிடிக்க வேண்டியதுடன் சுகாதார திணைக்களத்தினால் காலப்போக்கில் மேற்கொள்ளப்படும் சட்டதிட்ட திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது அவசியமாகும்.

(iii) இப்பயிலுனர்களுக்கான பயிற்சிகளின் போது நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையாது அல்லது நடத்தை மற்றும் செயற்பாடுகள் திருப்தியற்ற அல்லது பரீட்சை விதிமுறைகளை பின்பற்றாது மற்றும் பயிற்சிக் காலப் பகுதியில் உரிய வகையில் சமுகமளிக்காது இருப்பின் எவ்வித முன்னறிவித்தலோ அல்லது நட்டஈடு இன்றியோ எந்நேரத்திலும் இடைநிறுத்தப்படலாம்.

(iv) பயிற்சியின் போது கொடுப்பனவாக ரூபா 6000 வழங்கப்படும்.

(v) பயிலுநர்கள் பயிற்சி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் போது பயிலுநரானவர், பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதாகவும் பயிற்சியின் போது அதனைவிட்டு விலகமாட்டேன் எனவும், பயிற்சியின் பின் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் ஆகக் குறைந்தது 10 வருடங்கள் சேவையாற்றுவேன் எனவும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது தொடர முடியாவிடின் மேற்குறிப்பிட்ட (iii) இல் உள்ளவாறு பயிலுநர் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் மீள்செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

14. **சேவைக்கு அமர்த்தல் விதிகள்.**- பயிற்சி நெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சித்திபெறும் பயிலுநர்களுக்கு குறித்த துறைகளுக்கான தரம் III ற்கான நியமனங்கள் அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் எப்பகுதியாயிலும் உள்ள வெற்றிடங்களைப் பொறுத்து இந்நியமனங்கள் வழங்கப்படும்.

15. விண்ணப்பங்களை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாக நிரப்பவும். பயிற்சிகளின் போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து இடைநிறுத்தவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

16. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையில் எப்பகுதியாயினும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் மற்றும் உள தகுதியை நிரூபிப்பதற்கான மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

17. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கேற்பவும், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தும் ஏனைய அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்கும் கீழ்படிவாக செயற்பட வேண்டும்.

18. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக் கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2008.05.08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

துணை மருத்துவத் துறைகளுக்கான (PSM) தொழிற் பயிற்சிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல் - 2008
விண்ணப்பிக்கும் பாடநெறி ............................................

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :———.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.

(இ) முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :———.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) அஞ்சல் முகவரி :-
சிங்களம்/தமிழில் :———.
ஆங்கிலத்தில் :———.

4. நிரந்தர முகவரி :-
சிங்களம்/தமிழில் :———.
ஆங்கிலத்தில் :———.

(ii) மாவட்டம்..................................

(iii) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா?, (ஆம் / இல்லை) :——.

(iv) ஆம் எனில் எவ்வளவு காலம் :———.

5. பிறந்த திகதி :-
ஆண்டு ................... மாதம் ................. திகதி .................

30.06.2008 ஆந் திகதியில் வயது :-
வருடங்கள் :———. மாதங்கள் :———. நாட்கள் :———.

6. பால் : (உரிய கூட்டில் "✓" குறிப்பிடவும்)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா? .................................

9. கல்வித் தகைமை:

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர்தரம்) பரீட்சை (விஞ்ஞான பிரிவு மட்டும்)

(தயவு செய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்)

ஆண்டு : ............................. சுட்டெண் : ..........................
Z புள்ளி : ....................

| பாடம் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சை :
முதலாம் அமர்வு :
ஆண்டு :...................... சுட்டெண் :.....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

இரண்டாம் அமர்வு :
ஆண்டு :..................... சுட்டெண் :.....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

10. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித் துள்ளீரா? :-
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

7. **விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழி கின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தேர்வுக்கு முன்னராயின் தகுதியற்றவனாவதற்கும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

..................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

| முத்திரை |
|---|

திகதி :.................................

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................. எனக்கு தனிப்பிட்ட முறையில் பரீட்சமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2008 ....................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன்.

...........................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் விபரம் :-

முழுப் பெயர் :.........................................................................

தொழில் :.................................................................................

முகவரி :.................................................................................

திகதி :..................................

5-427

---

## பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### வரவேற்பாளர் பதவி

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சில் தற்போது காணப்படும் மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக 'ஏ4' அளவு கடதாசியில் தயாரிக்கப்பட்டு "செயலாளர், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, இல. 464பி, பன்னிப்பிட்டி வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2008, யூன் மாதம் 13 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ ஆனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவக்கொவ்வாத மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை கொண்டிருக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வரவேற்பாளர் பதவி" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. **பதவிப் பெயர்**.- வரவேற்பாளர் பதவி :

2. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/வர்த்தகம்/தூயகணிதம் / அடிப்படை கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலான 6 பாடங்களில் 4 திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் ஐந்து பாடங்களுக்கு குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்).

கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலான 6 பாடங்களில் 4 திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே

அமர்வில் ஐந்து பாடங்களுக்கு குறையாமல் சித்தியடைதல் வேண்டும்) ;

அல்லது

தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலான 6 பாடங்களில் 4 ஏ அல்லது பி சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் ஐந்து பாடங்களுக்கு மேற்படாமல் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.) ;

மற்றும்

மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியில் தமது எண்ணங்களை வெளிப்படுத்தும் திறன் மற்றும் புரிந்து கொள்ளும் திறன் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி தமிழ் மொழிமூலமல்லாதவராக இருப்பின் அக்குறித்த மொழியில் அறிவைப் பெற்றிருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும்.

3. **தொழில்சார் தகைமைகள்**.- சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்க அல்லது புகழ்பெற்ற நிறுவனமொன்றில் இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (தொடர்புடைய சான்றிதழ்களின் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.)

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இப் பதவியானது ரூபா 13,120- 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040 எனும் மாதாந்த சம்பளத்திற்குரித்துடையது. (பொது நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 (iv) இற்கமைவான சம்பள தொகுதி எம். என். I - 2006 ஏ)

5. **வயது எல்லை**.- விண்ணப்பம் கிடைக்கப்பெறும் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரி களுக்கு ஆகக்கூடிய வயதெல்லையானது பொருந்தாது.)

6. **சேவை நிபந்தனைகள்**.- (i) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இன் பிரிவுகள் 10-12 இலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையன.

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 7/2007 இன் ஏற்பாடுகளின் படி நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதியினுள் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரி ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.

8. **ஏனைய குறிப்புக்கள்**.- அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் தொழில்புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

சீதா விதானராச்சி,
செயலாளர்.

பாராளுமன்ற அரசாங்க அமைச்சு,
இல. 464பி, பன்னிப்பிட்டிய வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

வரவேற்பாளர் பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :- (திரு./திருமதி/செல்வி) :-----.
2. முழுப் பெயர் :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. தபால் முகவரி :-----.
5. தற்போது சேவை செய்யும் நிறுவனம் :-----.
   முகவரி :-----.
   பதவி :-----.
6. தேசிய ஆளடையாள அட்டை இல :-----.
7. பால் :-----
8. (i) பிறந்த திகதி :-

   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

   (ii) 2008, யூன் 13 ஆந் திகதியன்று வயது :-

   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐
9. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா? :-----.
10. கல்விசார் தகைமைகள் :-

| க. பொ. (சா. த.) | | | க. பொ. த. (உ. த.) | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | பாடம் | தரம் | ஆண்டு | பாடம் | தரம் |
| | | | | | |

11. ஏனைய தகைமைகள் :-
    (i) ........................................................................
    (ii) ....................................................................
    (iii) ....................................................................

12. துறையிலுள்ள அனுபவம் :-

நிறுவனம்.........................................................................
..........................................இருந்து...............................வரை

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.......................................................................................
ஆகிய என்னால் இவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்குட்பட்டவரை உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இவ் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவலானது பொய்யானதாகவோ அல்லது பிழையானதாகவோ தேர்வுக்கு முன்பாக கண்டுபிடிக்குமிடத்து நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப் படுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப் படுவேன் என்பதனையும் நான் அறிவேன் என்பதுடன் நான் இப்பரீட்சையின் அனைத்து விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கும் இணங்கிக் கொள்கிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

14. **விண்ணப்பதாரி அரசாங்க சேவை/மாகாண சேவையில் பணிபுரிபவரெனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி...................... .......................... எமது அமைச்சு/திணைக்களத்தில் பயிலுனர்/அமைய/ தற்காலிக/ நிரந்தர பதவியில்..................... .........................ஆக பணிபுரிவதுடன் அவரக்கெதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் மேற்படி பதவிக்கு இவர் தெரிவு செய்யப்படுமிடத்து இவரை இச் சேவையில் விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை).

பதவி :-----.
அமைச்சு/திணைக்களம்/நிறுவனம் :-----.
திகதி :-----.

5-438

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2006 (2008)

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2008, ஓகத்து மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

2. **பரீட்சை முறையும் பாடத்திட்டங்களும்.**- இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களை உள்ளடக்கியதுடன் குறித்த இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கான நேரமானது 3 மணித்தியாலங்களைக் கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கான மொத்தப்புள்ளி 100 என்பதுடன் தேறுவதற்கு தேவையான ஆகக்குறைந்த புள்ளி 40 ஆகும். சகல விடயங்களுக்கும் ஒரே அமர்விலோ அல்லது பலதடவைகளிலோ அமருவதற்கான அனுமதி உத்தியோகத்தர்களுக்குண்டு.

**முதலாவது வினாப்பத்திரம்** - விடய இலக்கம் 1 - பொருளாதார அபிவிருத்தி, வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள் :

(i) பொருளாதார அபிவிருத்தி
(ii) வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள்

**இரண்டாவது வினாப்பத்திரம்** - விடய இலக்கம் 2 - தாபனக் கோவைகள், நிதிப்பிரமாணங்களும், அலுவலக முறையும் :

(i) அலுவலக முறை :
(அலுவலக முறையின் முக்கியத்துவம், கோட்பாடுகள் கிடைக்கப்பெறுகின்ற கடிதங்கள் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பில் செயற்படுதல், ஆவணங்களில் குறிப்பெழுதுதல், பொது மக்களுடன் செயற்படுவது தொடர்பான விளக்கங்கள்)

(ii) தாபன விதிக்கோவை - (I, II,, III, IV, VII, XII, XIV, XV, XXV)
நிதிப்பிரமாணங்கள் - (I, II,, III, XIII பிரிவுகள்)

3. இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் A4 அளவிலான தாள்களில் மட்டுமே தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்கள் தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இயல்பாக அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணத்துவம் இல்லாமல் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியொன்று தங்களிடம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக இருக்கும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது அங்கு தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்களப் பிரதிகளில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் பிரதிகளில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப் படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவம் தங்களது நிறுவனத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர் பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அந்த மாவட்ட/பிரதேச செயலாளர்கள் ஊடாக) 2008, யூலை மாதம் 4 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தமது விண்ணப்பப் படிவத்தினை அரசகரும மொழியில் அல்லது தாம் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தயாரித்துக்கொள்ள முடியும்.

5. விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து அவரினால் அது பற்றி தாமதிக்காமல் கீழ்க்காணும் தகவல்களுடன், "பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்" இற்கு அறிவிக்கப்படல் வேண்டும். (தந்திகள் அனுப்ப வேண்டிய முகவரி : "பரீட்சைகள்" பத்தரமுல்லை.)

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படி வத்தினது உறுதி செய்யப்பட்ட பிரதியினையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும் கொழும்பிற்கு வெளியிடங்களில் வசிப்பதாயின் அனுமதிப்பத்திரம் அனுப்பி வைப்பதற்கான "பெக்ஸ்" இலக்கமொன்றும் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தையும் வைத்து இலங்கை பரீட்சை கள் திணைக்களத்துக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாகும் :-

1. பரீட்சையின் பெயர் ;
2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
3. விண்ணப்பதாரியின் முகவரி ;
4. விண்ணப்பப்படிவம் தபாலில் இடப்பட்ட தபால் அலுவலம் ;
5. பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல விடயங்களுக்கும் பரீட்சை மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கென பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் ஆளடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப்பத்திரம்).

7. பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன்/அவள் உள்ளாக வேண்டிவரும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்குள் அடங்காத ஏதேனும் விடயமொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் விருப்பின் பிரகாரம் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டத்தரணி ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, செத்சிரிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2006 (2008)**

First Efficiency Bar Examination for Samurdhi Managers - 2006 (2008)

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2, தமிழ் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

(உதா.: SILVA, A. B.)

1.2 முழுப் பெயர் :-----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2. நிரந்தர முகவரி :-----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

2.1 நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.2 அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.
(பிரவேசப்பத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப் படும்.)

3. பால் (பெண்/ஆண்) :
பெண் - 1, ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-

விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. தேசிய ஆளடையாள அட்டை இல.:

6. பிறந்த திகதி :
ஆண்டு : மாதம் : திகதி :

7. 2008.07.04 ஆந் தினத்தன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

8. பதவியும் தரமும் :-----.

மேலே காண்பிக்கப்பட்ட விடயங்கள் சரியானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உள்ளதெனவும் அறியத்தருகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு நான் இணங்குகின்றேன் எனவும் அறியத்தருகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலே விபரம் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகள் உள்ளதெனவும் அவரினால் தரப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உண்டு என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

5-369